தமிழ் முரசு, மார்ச் 10.2007

எழுந்தன. இதையடுத்து ` இரண்டாவது நாளாக ளனர்.



பெண்ணின் அடிமைத்தனத்தையும், நாட்டில் உள்ள தீவிரவாதத்தையும் சித்தரிக்கும் வகையில் கும்பகோணத்தில் நேற்று ஆடவர் கல்லூரியின் மாணவர் கவிமணியின் கலாம் காரி ஓவியம் குறித்த கீறல் கண்காட்சி நடைபெற்றது. இதில் இடம்பெற்றிருந்த ஓவியத்தை தனது குழந்தை யுடன் பார்வையிடுகிறார் ஒருவர்.

Scanned with OKEN Scanner

# வெளியீட்டு விழா

பெற்றுக் கொண்டார். அவரைத் தொடர்ந்து ஓவியர் அன்பழகன், பேரா.அருளரசன், தோழர் பகத்சிங் ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.




சிறப்பு அழைப்பாளர்கள் வாழ்த்துரையுடன் ஓவியக் கல்லூரி மாணவர் கவிமணி ஏற்புரை கூற விழா புரட்சியாளர் அம்பேத்கரை நினைவுபடுத்தி நிறைவடைந்தது.

□ராஜ்.அ

Scanned with OKEN Scanner

# கீறல் ஓவியக் கண்காட்சி



கும்பகோணம் ஓவியக் கல்லூரி இறுதியாண்டு மாணவர் கு. கவிமணியின் 'கீறல்' ஓவியக் கண்காட்சி மார்ச் 10, 11 ஆகிய 2 நாட்கள் குடந்தையில் நடைபெற்றது. விழாவில் கவிமணி ஆய்வு செய்த இந்திய ஓவிய முறைகளில் ஒன்றான 'கலம்காரி' ஓவியம் பற்றிய குறுந்தகடு வெளியிடப்பட்டது. சமூகத்தில் ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக பாடுபட்ட தலைவர்களின் ஓவியங்களையும், அவர்களது வாழ்க்கை குறிப்பும் அடங்கிய 'விதைகள் வளர...' நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. இத்தகைய சிறப்புமிக்க விழாவிற்கு, குடந்தை எஸ்.எம். ஜெயக்குமார் தலைமை தாங்கினார். புலவர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். கீறல் ஓவியக் கண்காட்சியை புதுவை ஓவியர் அன்பழகன் திறந்து வைத்தார். 'கலம்காரி ஓவியம்' குறுந்தகடை ஆவணப்பட இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமார் வெளியிட, ரேவதி (நாகை) பெற்றுக் கொண்டார். சமூகப் போராளிகளை நினைவுபடுத்தும் வகையில் இளையோரை சென்றடைய வேண்டி ஓவியர் கவிமணியின் பேனா ஓவியக் கோடுகளை பல்வேறு பரிமாணங்களுடன் சித்தரிக்கும் 'விதைகள்' நூலை கு. ஜக்கையன் வெளியிட, முதல் பிரதியை தோழர் பி.கே. சாமி மற்றும் ஜார்ஜ் வழக்கறிஞர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். ■

# 'கலம்காரி'யை தேடி ஒரு பயணம்!

கல்லூரி படிப்பு முடித்ததும் எந்த நிறுவனத்தில் எத்தனை லகரம் சம்பளம் கிடைக்கும் என்று யோசிப்பவர் மத்தியில் 'கலம்காரி' ஓவியத்தை பிரபலமாக்குவதில் தன் நேரத்தை செலவிடுகிறார் கவிமணி. 23 வயதுதான் ஆகிறது. காதலிக்காக அலைய வேண்டியவர், 'கலம்காரி'க்காக அலைகிறார்.

அதென்ன 'கலம்காரி?' 'கலம்' என்றால் பேனா. 'காரி' என்றால் எழுதுபவர். பேனாவால் எழுதப்படும் ஓவியமே 'கலம்காரி'. இது வடமொழி சொல்லாக இருந்தாலும் அந்த பாணி ஓவியம் பிரபலமானது தமிழகத்தில்தான்.

"திருச்சியை அடுத்த துறையூர் த. முருங்கப்பட்டி கிராமம்தான் சொந்த ஊர். கல்லூரி படிப்புக்காக குடந்தை ஓவியக் கல்லூரில சேர்ந்தேன். அப்பதான் 'கலம்காரி' ஓவியம் கண்ல பட்டுச்சு. எல்லாராலயும் இதை வ்ரைய முடியாதுங்கிறதுதான் இதனோட ஸ்பெஷல். அதனாலயே இந்த ஓவியத்தை தேடியும், அதன் பிறப்பிடத்தை நாடியும் அலைஞ்சேன். ஆந்திர மாநிலம் காளஹஸ்திலயும், குடந்தையை அடுத்த சிக்கல்நாயக்கன்பேட்டையிலும் ஒரு சிலர் மட்டுமே இந்த ஓவியத்தை வரையறாங்கனு தெரிஞ்சது.

15 ம் நூற்றாண்டுக்கு முன்னுயே இந்த ஓவியம் தோன்றியதா வரலாறு சொல்லுது. மலைப் பகுதிகள்ல வாழ்ந்த துறவிங்க தியானத்துக்கு அப்புறம் தியானத்துக்கு ஏற்ற ஓவியங்களை அவங்க துணிகள்ல வரைஞ்சாங்க. சித்த மருத்துவத்தை அறிந்த துறவிங்க இலைகளோட சாறுகளையும், மரம், செடி, காய்களின் கொட்டைகள், வேர்களையும் பயன்படுத்தி ஓவியத்தை வரைஞ்சாங்க.

இந்த துறவிங்க பின்னாடி திருப்பதிக்கு போய்ட்டாங்க. அங்கயும் துணிகள்ல வரைஞ்சிருக்காங்க. அதைப் பார்த்த ஜொன்னலகெட்டா குடும்பத்தினர் தங்களுக்கும் சொல்லித் தரும்படி கேட்டிருக்காங்க. துறவிங்களும் கத்துத் தந்தாங்க, இப்படித்தான் இந்த ஓவியம் அந்த குடும்பத்துக்கு போச்சு. வழி வழியா இந்த ஓவியத்தை ஜொன்னலகெட்டா குடும்பத்தினர் மட்டுமே வரைஞ்சு வந்தாங்க.

1956ல அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேரு அகில இந்திய கைவினை பொருட்கள் வாரியம் ஒன்றை உருவாக்கி அழியும் கலையை மேன்மை படுத்த முன்வந்தாரு. அதன்படி தென்னிந்திய கைவினைப் பொருட்கள் வாரியத் தலைவரா நியமிக்கப்பட்ட வெங்கடாசலம், 'கலம்காரி' ஓவியத்தை பத்தி தெரிஞ்சுக்க சென்னை ஓவியப் பள்ளில பணிபுரிந்த கோடூர் ராமமூர்த்தியை நியமனம் செய்தாரு. அவரும் காளஹஸ்திக்கு வந்து ஜொன்னலகெட்டா குடும்பத்தினரை சந்திச்சு பேசியிருக்காரு.

அந்த குடும்பத்தைச் சேர்ந்த லட்சுமணஅய்யாவை கூட்டிட்டு வந்து மாத சம்பளம் அடிப்படைல இந்த ஓவியத்தை மத்தவங்களுக்கும் கத்துக் கொடுக்க ஏற்பாடு செய்தாரு. 93 வரைக்கும் 130 மாணவர்களுக்கு பயிற்சி தந்திருக்காங்க. இதை மேலும் பிரபலப்படுத்தணும். அதுதான் என் நோக்கம்" என்கிறார் கவிமணி.

– வி.சுந்தர்ராஜ்

படம்: சி.எஸ்.ஆறுமுகம்



கவிமணி

Scanned with OKEN Scanner

JUNE 23, DHINA THANTHI. 2007



சுனாமி அரக்கனாக கடலை சித்தரிக்கும் ஓவியத்தை, கலெக்டர் தென்காசி ஜவகர் ஆர்வத்துடன் வாங்கிப் பார்த்த போது எடுத்த படம்.

### வேளாங்கண்ணியில் கண்காட்சி

# சுனாமி துயரங்களை சொல்லும் ஓவியங்கள்

## கலெக்டர் பாராட்டு

நாகப்பட்டினம், ஜூன் 23- வேளாங்கண்ணியில் சுனாமி துயரக் காட்சிகள் வரையப் பட்ட ஓவியக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

### ஓவியக் கண்காட்சி

பெங்களூரை சேர்ந்த தேசா அமைப்பினர், சுனாமி பாதிப்பு களை ஓவியர்களின் கண்ணோட் டத்தில் பதிவு செய்து, அதனை பல்வேறு நகரங்களில் காட்சிப்ப டுத்துவது என திட்டமிட்டனர். அதன் மூலம் சுனாமி பாதிப்புகள், பார்வையாளர்களுக்கு மனித நேயத்தை தூண்டுவதுடன் உதவி செய்யும் மனப்பாங்கை ஏற்படுத் தும் அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயன்ற உதவிகளை பெறமுடியும் என தேசா அமைப்பு தீர்மானித்தது.

அத்துடன் சுனாமி போன்ற பேரிடர்களில் தற்காப்பு பணிகள் குறித்த விழிப்புணர்வு ஒவ்வொரு வரும் பெற வேண்டும், அதற்கு அதன் துயர, கொடிய காட்சிகள் உதவும் என்ற நோக்கிலும், சுனாமி பாதிப்புகளை ஓவியங்களாக வரைந்து காட்சிப்படுத்த முன் வந்தனர்.

இந்தியாவில் உள்ள 7 மாநி லங்களை சேர்ந்த பிரபல ஓவி யர்கள் சுனாமியால் பாதிக்கப் பட்ட பகுதிகளுக்கு பாதிப்பு நிகழ்ந்த உடன், சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். அவர்களது கண் இமைகளை விரிய வைத்து, நெஞ்சை அதிரவைத்த காட்சி களை ஓவியங்களாக வரைந்த னர். 33 காட்சிகள் சுனாமியின் கோர பாதிப்புகளை வார்த்தை கள் இன்றி உணர்த்தும் ஓவியங்க ளாகின.

### வேளாங்கண்ணி

இந்த ஓவியங்களை தேசா அமைப்பினர் முதல் முறையாக இந்தியாவிலேயே சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட நாகை மாவட்டத்தில், உலகப் பிர சித்தி பெற்ற சுற்றுலா தலமான வேளாங்கண்ணியில் இலவ கண்காட்சிக்கு வைத்துள்ளன கடலை கன்னியாகவும், வாழ்வ தாரம் தரும் தெய்வமாகவு உயிர் பறித்த சுனாமி கோர அரக் னாகவும் பல்வேறு முகங்களி சித்தரிக்கும் தத்ரூபமான ஓ யங்கள் கண்காட்சியில் இட பெற்றுள்ளன.

கடலிலே பிறந்து, வளர்ந்து, க லையே உறைவிடமாக கொண் ருக்கும் மீன்கள், சுனாமி அலை னால் மனித உயிர்கள் கருட்ட பட்டதை கண்டு, கடலை வெறுத்து கண்ணீர் வடிப்ப போன்ற ஓவியங்களும் கண்கா சியில் இடம் பெற்றுள்ளன.

### கலெக்டர் பாராட்டு

இந்த ஓவியக் கண்காட்சியை மாவட்ட கலெக்டர் தென்கா ஜவகர் பார்வையிட்டார். தே அமைப்பினரின் முயற்சியை பாராட்டி, அவர்களுக்கு வே டிய ஒத்துழைப்பு தருவதா கலெக்டர் தெரிவித்தார்.

வேளாங்கண்ணியில் 2 தினா ளாக நடைபெறும் சுனா ஓவியக் கண்காட்சி இதை அடுத்தபடியாக புதுச்சே நாகூர் நகரங்களிலும், வெளி டுகளிலும் நடத்தப்பட இரு தாக, தேசா திட்ட அலுவலர்க பிரபாகர், அன்பழகன் ஆகியோ தெரிவித்தனர்.

---

வில், "காய்கறி விலை ஏற்றத்திற்கு முக்கிய காரணம் பருவகால மாற் றம் தான்.

இந்த விலை ஏற்றத்தை மாநில அரசு தான் தேவையான நடவ டிக்கைகளை மேற்கொண்டு கட் டுப்படுத்த வேண்டும்" என்று தெரிவித்தார்.

தினகரன்
திங்கட்கிழமை 10.11.2008





சத்தியமங்கலம் பஸ் நிலையம் அருகே நடந்த ஓவிய கண்காட்சியை நகரமன்ற தலைவர் வேலுச்சாமி பார்வையிடுகிறார். அருகில், ஓவியர் கவிமணி, பழனிசாமி, கருப்புசாமி மற்றும் பலர்.

# சத்தியில் ஓவியக்கண்காட்சி

சத்தியமங்கலம், நவ. 10: ஈரோடு மாவட்ட பாரம்பரிய இசைகலைஞர்கள் சங்கம், அருந்ததியர் மனித உரிமை அமைப்பு சார்பில் சத்தியமங்கலம் பஸ் நிலையம் அருகே ஓவியக் கண்காட்சி நேற்று காலை முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. பழனிசாமி தலைமை தாங்கினார். கருப்புசாமி வரவேற்றார். நகரமன்ற தலைவர் வேலுசாமி, ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் மோகன்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மார்க்சிய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் மாரிமுத்து, கண்காட்சியை திறந்து வைத்தார்.

வழக்கறிஞர் பாப்பா மோகன், மலைவாழ் மக்கள் சங்கத் தலைவர் காதர், ஆதி தமிழர் பேரவை பாலு, கிருஷ்ணசாமி, விழுதுகள் அமைப்பு தங்கவேல், ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான கூட்டமைப்பு செல்வராஜ், தலித் விடுதலைக் கட்சி சகுந்தலா, பெரியார் தி.க. விடுதலை பழனிசாமி, மனித உரிமைக்கான குடி மக்கள் இயக்கம் குட்டுசாமி மற்றும் ஏராளமான மாணவ, மாணவிகளும் பங்கேற்றனர்.

ஓவியக் கண்காட்சியில் துறையூர் ஓவியர் கு.கவிமணியனின் படைப்புகள் வைக்கப்பட்டு இருந்தன. அந்த ஓவியங்களில் ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் வாழ்வியல், கலாச்சாரம், அநீதிகள் ஆகியவை தத்ரூபமாக வரையப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் அமைந்திருந்தன. முடிவில் பவானிசாகர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

Scanned with OKEN Scanner

தினகரன்

திங்கட்கிழமை 20.10.2008

# ஜோசப் கல்லூரியில் ஓவியக் கண்காட்சி

திருச்சி, அக். 20: திருச்சி புனித ஜோசப் கல்லூரி டிவி ஹாலில் நடந்த ஓவிய கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பார்வையிட்டனர்.

முகமிழந்தோமே என்ற தலைப்பில் நடத்தப்பட்ட ஓவிய கண்காட்சியை ஓவியர் கவிமணி வரைந்திருந்தார். மக்கள் கலாசாரம், போராட்ட வாழ்வு, தற்போதைய சூழல் போன்றவை குறித்தான சாடல்கள் ஓவியக் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன.

முன்னதாக நடந்த துவக்க விழாவில், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் சரவணன் வரவேற்றார். தமிழ் ஆய்வியல் எழுத்தாளர் நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் கண்காட்சியை திறந்து வைத்து பேசி னார்.

அய்க்கப் இல்ல மாநி இயக்குனர் அருள்ரவ முன்னிலை வகித்தார் இதில், ஆவணப்பட இயக் குனர் ரேவதி, வினிதன் கருப்பசாமி உட்பட பல பேசினர். அருந்ததியர் பாதுகாப்பு இயக்க பொறு யாளர் சிவகன் நன்றி கூற னார்.



திருச்சி ஜோசப் கல்லூரியில் நேற்று நட்ந்த அருந்ததியர் வாழ்வியல் பற்றி ஓவியக்கன்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஓவியங்களை ஆர்வத்துடன் பார்வையிடு மாணவர், மாணவிகள்.



சத்தியமங்கலம் பஸ் ஸ்டாண்டு அருகே அருந்ததியர்
உள் இடஒதுக்கீடு குறித்து நடந்த ஓவிய
கண்காட்சியை பள்ளி குழந்தைகள் பார்வையிட்டனர்.

Scanned with OKEN Scanner

தமிழ் முரசு





திருச்சி ஜோசப் கல்லூரியில் அருந்ததியர் வாழ்வியல் குறித்தான ஓவியக்கண்காட்சி நடைபெற்றது. இதனை பார்வையிடும் மாணவ, மாணவிகள்.

Scanned with OKEN Scanner

### கலம்காரி ஓவியத்திற்கு புத்துயிர்

# குடந்தை மாணவருக்கு விருது

கும்பகோணம், மார்ச் 26: அழிந்துவரும் கலம்காரி ஓவியத்திற்கு புத்துயிரூட்டும் முயற்சியில் ஈடுபட்டு வரும் கும்பகோணம் கவின் கலை கல்லூரி மாணவர் கவிமணிக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

கும்பகோணம் அரசு கவின் கலைக்கல்லூரி மாணவர் கவிமணி. வண்ணக்கலை துறையில் முதுகலை படிக்கிறார். இந்திய பாரம்பரிய ஓவியமான கலம்காரியை மீண்டும் பிரபலப்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். இந்தியாவின் பாரம்பரிய ஓவியங்கள், கலைகள் குறித்த கண்காட்சி மற்றும் சாதனையாளர் தேர்வு கடந்த 15ம் தேதி டெல்லியில் நடந்தது.

இதில், மறக்கப்படும் கலம்காரி ஓவியம் என்ற தலைப்பில் மாணவர் கவிமணி காட்சி அரங்கு அமைத்திருந்தார். இது தேர்வுக்குழுவினரால் பரிசுக்கும், விருதுக்கும் செய்யப்பட்டது. அங்கு நடந்த நிகழ்ச்சியில் முதல்வர் ஷீலா தீட்சித் இதற்கான விருதையும், சான்றிதழையும் கவிமணிக்கு வழங்கினார்.

இதுகுறித்து கவிமணி கூறுகையில்,

மலைகளில் கிடைக்கும் மூலிகை மூலம் பெறப்படும் வண்ணங்களை கொண்டு துணிகளில் தீட்டப்படுவதே கலம்காரி ஓவியம். இந்த ஓவிய முறை அழியும் நிலையில் உள்ளது. எனவே, இதை மீண்டும் பிரபலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன். இதுகுறித்த குறும்படமும் இயக்கியுள்ளேன். பயிற்சியாளர் ஒருவரை நியமித்து இளைஞர்களுக்கு கற்றுக்கொடுத்தால் கலம்காரி ஓவியம் மீண்டும் புத்துயிர் பெறும். அரசு அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

Scanned with OKEN Scanner

# Sketching their sufferings in a poignant style

Staff Reporter

**TIRUCHI:** Silhouettes of cobblers, scavengers and bonded labourers greeted the visitors with angst and distress at 'Mugam Izhandhomae,' an exhibition of the paintings of K. Kavimani, held on the St. Joseph's College campus here on Sunday.

The painter's reflection on the oppression of Dalits and denial of basic human rights to them, especially to the community of cobblers and scavengers was brought out artistically through acrylic, water colour and pencils.

A painting of a girl aspiring for a better education, for instance, had a sequel, where her dreams are crushed owing to poverty and discrimination. Kavimani, through his adept pencil strokes, portrayed the limitation of their creative thinking due to the monotony of their jobs and intolerant behaviour of the society towards them. Politics, one of his paintings depicted, remain far-fetched dream for this community. School children in his paintings carry lost looks, symbolising their uncertain future.

Another set of paintings on the agony the Dalit women face were more dramatic and powerful. Manual scavengers, mostly women, face early death due to diseases and unhygienic conditions. There were unsettling images of gender discrimination, sexual harassment and educational aspirations of women.

"There have not been much done to improve the lives of these people. They have remained to be most neglected among Dalits. I wanted to voice their concerns through my paintings," says Mr. Kavimani, a final year student of Master of Fine Arts. He plans to display the 35 paintings at all districts in the state and finally at Chennai in December, where he would submit a petition seeking special reservation for Arundhathiyars.



**MOVING STROKES:** *Young visitors taking a look at the paintings in the exhibition in Tiruchi on Sunday.* – PHOTO: M. MOORTHY

Scanned with OKEN Scanner

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அரசு கவின் கல்லூரியில் உயிர் மாதிரி ஓவியம் வரையும் வகுப்பு நடைபெற்று வருகிறது. நேற்று முதியவர் ஒருவரை அமர வைத்து, அவரைப்போல் மாணவர்கள் வரைகின்றனர்.

# மாவட்டம்



I (Kavimani) DRAW IN MY MFA CLASS ROOM
LIFE STUDY MODEL DEFERANT APPORACH
THIS NEWS PUBLISHED BY 'DINAKARAN' NEWS PAPER
AT. 18. SEP 2008.

Scanned with OKEN Scanner



முகாமில் வடிவமைப்பு உபகரணங்களை உதவி இயக்குனர் முகமதுமருது பயிற்சியாளர்களுக்கு வழங்கியபோது எடுத்தபடம். அருகில் திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்க தனிஅலுவலர் கந்தசாமி, குழுமபொருளாளர் ராஜேந்திரன், குழுமதலைவர் குழந்தைராசு, செயலாளர் ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

### திருபுவனத்தில்

# நெசவாளர்களுக்கு வடிவமைப்பு பயிற்சி முகாம்

திருவிடைமருதூர், ஜன.4- திருபுவனத்தில் நெசவாளர்களுக்கு வடிவமைப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

## பயிற்சி முகாம்

திருபுவனம் ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சி குழுமம் சார்பில் நெசவாளர்களுக்கு வடிவமைப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. தஞ்சை, பெரம்பலூர் மாவட்ட கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குனர் முகமது மருல் தலைமை தாங்கினார். கைத்தறி வளர்ச்சிக்குழும தலைவர் குழந்தைராசு, மாநில கைத்தறி உயர்மட்டக்குழு உறுப்பினர் பஞ்சநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயலாக்க அலுவலர் ராஜ்குமார் வரவேற்றார். திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்க தனி அலுவலர் கந்தசாமி முகாமை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். 15 நாட்கள் நடைபெறும் இம்முகாமில் 20 நெசவாளர்கள் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சியாளராக கவிமணி செயல்படுகிறார்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை உதவி இயக்குனர் முகமது மருது பேசியதாவது:-

## ரூ.58 லட்சம் ஒதுக்கீடு

தமிழ்நாட்டில் 25 இடங்களில் கைத்தறி வளர்ச்சி குழுமம் செயல்படுத்தப்படுகிறது. 15 இடங்களில் தமிழ்நாடு கைத்தறி துறை சார்பிலும், 10 இடங்களில் தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ் சார்பிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டம் 3 ஆண்டு கால திட்டமாகும். திருபுவனம் குழுமத்திற்கு மொத்தம் ரூ.58 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல் ஆண்டிற்கு ரூ.18 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நெசவாளர்களுக்கு வடிவமைப்பு, நெசவு, சாறுஇடல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

தினத் தந்தி ஜன. 5. 2009.

# தினகரன்

திங்கட்கிழமை 4.7.2011




ஈரோட்டில் பகுஜன் சமாஜ் கட்சி, பாம்செப் சார்பில் நடைபெற்ற சமூக மாற்றத்திற்கான ஓவிய கண்காட்சியை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.


Scanned with OKEN Scanner

தினகரன்

வெள்ளிக்கிழமை 18.3.2011

தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோவிலில்

# சோழர்கால ஓவியம் கண்டுபிடிப்பு

கும்பகோணம், மார்ச் 18: தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலில் சோழர்கால ஓவியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழக கல்வெட்டியல் மற்றும் தொல்லியியல் துறையில் ஆய்வியல் நிறைஞர் மாணவர் கவிமணி சோழர்கால ஓவியங்கள் எனும் தலைப்பில் ஆய்வு செய்து வருகிறார். அதன்படி தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலை ஆய்வு செய்தார். ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட இந்த கோயிலில் விமானம், அலங்கார மண்டபம், உள் கோபுரம், வெளிக்கோபுரம், சுற்று மண்டபம், முன் மண்டபம் ஆகிய இடங்களில் லட்சத்திற்கும் மேற்பட்ட அழகிய நுண்ணிய வேலைபாடுகளுடன் கூடிய சிற்பங்கள் உள்ளன.

கோயிலின் கோபுரங்கள் மற்றும் சிற்பங்கள் மீது சுதை பூசி வண்ணங்கள் தீட்டப்பட்டிருக்கிறது.

பல இடங்களில் இடங்களில் பல்வேறு மூலிகைகளை கொண்டு வண்ணம் தயாரித்து சுதை ஓவியங்களை தீட்டியுள்ளனர். பின்னர் ஆட்சிக்கு வந்த நாயக்கர்கள் சோழர்களின் ஓவியங்களை அழித்துவிட்டு அதில் நாயக்கர்களின் ஓவியங்களை தீட்டினர்.

தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலில் அப்படி அழிக்கப்பட்டு, நாயக்கர்கள் தீட்டிய ஓவியங்கள் தற்போதும் நல்ல நிலையில் உள்ளது. இதில் கோயிலின் முன்மண்டபத்தில் இடது பக்கத்தில் உள்ள மண்டபத்தில் மூன்றாவது தூணின் அருகில் இரண்டு அடிக்கு ஒரு அடியில் சோழர் கால மலர் அலங்கார ஓவியம் உள்ளது. தற்போது அழியும் நிலையில் உள்ள இந்த ஓவியம் சோழர்கால ஓவியம் தான் என தமிழ் பல்கலைக்கழக கல்வெட்டு துறையினரும் ஒப்புதல் அளித்துள்ளனர்.

தாராசுரம் கோயிலில் காணப்பட்டுள்ள இந்த மலரோவியத்தில் மஞ்சள், சிவப்பு வண்ணங்கள் மட்டுமே காணப்படுகிறது. தஞ்சை பெரிய கோயில் ஓவியத்தையும், இந்த ஓவியத்தையும் ஒப்பீடு செய்த போது இந்த ஓவியம் சோழர்கால ஓவியமாக இருக்க வாய்ப்புள்ளது என கவிமணி கூறியுள்ளார்.

Scanned with OKEN Scanner

# பாரம்பரியத்தை பிரதிபலித்த புதுமையான ஓவியக் கண்காட்சி

## 100-க்கும் மேற்பட்ட ஓவியர்கள் பங்கேற்பு





ஓவிய முகாமை தொடங்கி வைத்த சென்னை லலித் கலா அகாடமியின் மண்டல செயலரும், தஞ்சாவூர் தென் மண்டல கலாசார மையத்தின் இயக்குநருமான ஆர்.எம்.பழனியப்பன். (வலது படம்) ஓவியம் வரைந்த ஓவியர்கள்.

புதுச்சேரி, மே 5: புதுச்சேரியின் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் பிரமாண்ட ஓவியக் கண்காட்சி பொதுமக்கள் மத்தியில் புதுச்சேரி கடற்கரைச் சாலையில் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் 111 ஓவியர்கள் பங்கேற்று தங்கள் ஓவியங்களை வரைந்தனர்.

புதுச்சேரி ஓவிய நுண்கலைக் குழு, புதுச்சேரி அரசின் சுற்றுலாத்துறை மற்றும் புதுச்சேரி அரசின் கலை மற்றும் பண்பாட்டு துறையுடன் இணைந்து பிரமாண்ட ஓவியக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்தது. இந்த கண்காட்சிகாக கடற்கரை சாலையில் 20-க்கும் மேற்பட்ட பிரமாண்ட செட்டுகள் போடப்பட்டன. ஒவ்வொரு செட்டிலும் 4 முதல் 5 பேர் வரை பங்கேற்று ஓவியங்களை வரைந்தனர்.

இந்த ஓவியம் வரையும் நிகழ்ச்சி புதுச்சேரியின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் இருக்க வேண்டும் என்று விதிமுறைகள் அளிக்கப்பட்டன. மேலும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மக்கள் அதிகம் கூடும் கடற்கரைப் பகுதியை ஒட்டி நடைபெற்றது. இதனால் கடற்கரைக்கு வந்த பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பலர் ஆர்வமுடன் வந்து பார்த்தனர்.

இந்த ஓவியக் கண்காட்சியில் பங்கேற்க புதுச்சேரி, தஞ்சாவூர், கும்பகோணம், கோவை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஓவியர்கள் வந்தனர். ஓவியம் பயிலும் மாணவர்கள், தொழில் முறை ஓவியர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்று ஓவியங்களை வரைந்தனர்.

இந்த ஓவியக் கண்காட்சிக்கு ஓவிய நுண்கலைக் குழு காப்பாளர் ஓவியர் மாலதி ராஜவேலு தலைமை தாங்கினார். சென்னை லலித் கலா அகாடமி மண்டலச் செயலர் பழனியப்பன் தொடங்கி வைத்தார். கலைபண்பாட்டுத்துறை இயக்குநர் மலர்கண்ணன், சுற்றுலாத் துறை இயக்குநர் டாக்டர் சிவக்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இந்த ஓவியக் கண்காட்சியில் ஓவியம் வரையும் கரையாம்புத்தூர் சாவி சதீஷ்குமார் கூறுகையில் புதுச்சேரியில் ஒரு பிரமாண்ட ஓவியக் கண்காட்சியை நடத்துவது ஓவியர்களை கௌரவிக்கும் செயல். இதுபோல் ஓவியக் கண்காட்சியை தொடர்ந்து நடத்த வேண்டும் என்றார்.

பாரதியார் பல்கலைக் கூடத்தின் மாணவர்கள் வசந்தன் மற்றும் திருநெல்வேலி சந்தன ஆறுமுகம் ஆகியோர் கூறுகையில் எங்களைப் போல் படிக்கும் மாணவர்களும் தங்கள் திறனை வெளிப்படுத்தும் விதமாக இந்த ஓவியக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற கண்காட்சியை ஆண்டுதோறும் நடத்த வேண்டும். இதன் மூலம் ஓவியம் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களுக்கும் ஏற்படும் என்றார்.

கோயம்புத்தூர் மார்ட்டின் கூறுகையில், நான் பத்திரிகைகளுக்கு ஓவியங்களை வரைந்து கொடுக்கும் பணியை செய்து வருகிறேன். கணிப்பொறியிலும் என்னால் நன்றாக ஓவியங்களை வரையமுடியும். ஏற்கனவே புதுச்சேரியில் நடைபெற்ற ரோட் ஷோவில் பங்கேற்றேன். இப்போது இந்த கண்காட்சியிலும் பங்கேற்றுள்ளேன். ஏற்கெனவே பெங்களூரில் பிரமாண்ட ஓவியக் கண்காட்சி நடைபெறும். இந்திய அளவில் புகழ்பெற்ற ஓவியர்கள் வந்து ஓவியம் வரைவர். அதுபோல் இந்த புதுவை ஓவியக் கண்காட்சியும் சிறப்பு பெறும் என்றார்.

தஞ்சாவூரைச் சேர்ந்த கவிமணி கூறுகையில், புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர்களை தள்ளுவண்டியில் வைத்து மனிதர்கள் பின் பக்கமாக தள்ளிச் சென்றனர். மனிதர்கள் விலங்குகளைப் போல் நடத்தப்பட்ட பழைய சம்பவங்கள் உள்ளன. இவைகளை வைத்து நான் ஓவியம் வரைய உள்ளேன். கடந்த 400 ஆண்டு புதுவை வரலாறு மட்டுமே எங்களுக்கு கிடைத்துள்ளது. மற்றவை கிடைக்கவில்லை. இதுபோல் ஓவியக் கண்காட்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றார்.

கலைமாமணி விருது பெற்ற புதுச்சேரி ஓவியர் சரவணன் கூறுகையில் நான் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று ஓவியக் கண்காட்சியில் பங்கேற்றுள்ளேன். போஸ்ட்மேன் தொழில் செய்து வருகிறேன். ஓவியம் படித்துள்ளேன். இந்த ஓவியக் கண்காட்சியில் படம் வரைய வந்தேன். புதுச்சேரியில் நடைபெறும் திருவிழா அதில் மக்கள் கூட்டம் ஆகியவற்றை மையப்படுத்தி படம் வரை உள்ளேன் என்றார்.

புதுச்சேரியில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெண்களின் உடை மற்றும் நகைகள், அவர்களின் வாழ்க்கை முறை, புதுச்சேரியில் பிரெஞ்ச் கலாசாரத்தை பறைசாற்றும் கட்டடங்கள், இயற்கை அழகுமிகு இடங்கள் ஆகியவற்றை ஓவியர்கள் ஓவியங்களாக வரைந்தவர். இம் முகாமில் வரையும் ஓவியர்களின் ஓவியங்கள் கண்காட்சிக்கும் வைக்கப்பட உள்ளன.

Scanned with OKEN Scanner

# உத்திரகோசமங்கையில் அழிந்து வரும் மரகத ஓவியங்களை பாதுகாக்க வேண்டும்

## கவின் கலை கல்லூரி மாணவர்கள் வேண்டுகோள்





■ கோவில் மேற்கூரையில் சிதிலமடைந்த நிலையில் உள்ள நடராஜர் மரகத ஓவியம். இடம்: மங்களநாதர் கோவில், உத்திரகோசமங்கை. ■ வில், அம்புடன் கம்பீரமாக நிற்கும் துவாரபாலகர். இடம்: திருப்புல்லாணி ஆதி ஜெகந்நாத பெருமாள் கோவில்.

**சென்னை, ஆக. 29–**

'புகழ்பெற்ற, ராமநாதபுரம் மாவட்டம், உத்திரகோசமங்கை மங்களநாதர் கோவிலில் உள்ள 17ம் நூற்றாண்டு விஜய ரகுநாத சேதுபதி காலத்து மரகத ஓவியங்கள் அழியும் தருவாயில் உள்ளன. அவற்றை பழமை மாறாமல் பாதுகாக்க வேண்டும்' என, வரைகலை பயிற்சிக்கு சென்ற சென்னை அரசு கவின் கலை கல்லூரி மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பேராசிரியர்கள் கு.கவிமணி, பாண்டி ஆகியோர் தலைமையில், சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்கள், ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரகோசமங்கை மங்களநாதர் கோவில், திருப்புல்லாணி ஆதி ஜெகந்நாத பெருமாள் கோவில் உள்ளிட்ட கோவில்களில், மூன்று நாள் வரைகலை பயிற்சிக்கு சென்றனர்.

### பயிற்சி

கோவிலில் உள்ள சிற்பங்களின் நுணுக்கங்கள், அளவீடுகள், வடிவமைப்பு முறைகள், கட்டடக்கலை அளவீடுகளை கண்டறிந்து, ஆய்வு செய்து தகவல் சேகரித்தனர்.

அதேபோல், நாகக்கன்னி சிற்பம், அழகிய மரக்கதவுகள், சிற்ப தூண்கள், கல் கருட பகவான், மரச்சிற்பம் உள்ளிட்ட சிற்பங்களை வண்ண ஓவியங்களாகவும், கோட்டோவியங்களாகவும் வரைந்து, வரைகலை பயிற்சி மேற்கொண்டனர்.

ஆய்வு குறித்து, அவர்கள் கூறியதாவது:

உத்திரகோசமங்கை மங்களநாதர் கோவிலில், சமீபத்தில் தான் கும்பாபிஷேகம் நடந்தது. இதற்காக, இரண்டு ஆண்டுகளாக கோவில் திருப்பணிகள் நடந்தன. ஆனால், அக்கோவிலில் உள்ள சிறப்பு வாய்ந்த மரகத ஓவியங்கள் செப்பனிடப்படவில்லை.

> “வரலாற்றுடன் தொடர்புடைய கோவிலாக கருதப்படும் இங்கு, சிறப்பு வாய்ந்த சயன ராமன் சன்னிதி உள்ளது. இக்கோவில் சிதிலமடைந்து வருகிறது”

இக்கோவிலில் உள்ள மூலவர் நடராஜர், பச்சை மரகதக் கல்லில் எழுந்தருளியுள்ளார். இக்கோவில் உட்புறச் சுவர்கள் முழுதும் வண்ண சுவர் ஓவியங்கள் இருந்துள்ளன.

### சமூகத்தின் சொத்து

ஆனால், அவை பராமரிப்பின்றி அழிந்து, தற்போது மேல்கூரையில் மட்டும் எஞ்சியுள்ளன. இவை, 17ம் நூற்றாண்டு விஜய ரகுநாத சேதுபதி காலத்து மரகத ஓவியங்களாகும். எஞ்சியுள்ள ஓவியங்களும் வண்ண தீட்டலில் தனிச் சிறப்பு பெற்றவை.

இந்த சுவர் ஓவியங்களில் பயன்படுத்தியுள்ள பச்சை வண்ணம், மரகத தன்மையை வெளிப்படுத்துகிறது. தமிழகத்தில் வேறு எந்த சுவர் ஓவியங்களிலும், இந்த பச்சை வண்ணம் காணப்படவில்லை.

எனவே, வண்ணம் மற்றும் ஓவிய நுட்ப வகைகளில், மரகத நடராஜர் கோவில் சுவர் ஓவியங்கள், தமிழகத்தின் அறிவியல், பண்பாடு அறிவு சமூகத்தின் சொத்தாக பாதுகாக்கப்பட வேண்டும். ஓவியங்கள் இடம்பெற்ற சுவர்களில், மின்சார வேலைப்பாடுகள் நடந்துள்ளன; அவை களையப்பட வேண்டும்.

மேலும், இந்த ஓவியங்களை புத்தகங்களாக ஆவணப்படுத்த வேண்டும். ஓவியங்களைவீடியோ பதிவு செய்து, அதன் சிறப்புகள் குறித்து, கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு விளக்க வேண்டும்.

அதேபோல், ராமனின் தந்தை தசரத மஹாராஜா பூஜித்ததாகக் கூறப்படும், திருப்புல்லாணி ஆதி ஜெகந்நாத பெருமாள் கோவிலில் உள்ள துவார பாலகர்கள் சிற்பங்கள், வில், அம்புடன் கூடிய சிறப்பு வாய்ந்ததாக உள்ளன.

### சயன ராமன்

இவை, ராமனுக்கு வேடர்கள் பாதுகாப்பு அளித்ததாக அமைந்துள்ளன. இதுவரை யாரும் இதை குறிப்பிடவில்லை. இந்த ஆய்வின் வாயிலாக, முதன்முறையாக நாங்கள் உறுதி செய்கிறோம்.

வரலாற்றுடன் தொடர்புடைய கோவிலாக கருதப்படும் இங்கு, சிறப்பு வாய்ந்த சயன ராமன் சன்னிதி உள்ளது. இக்கோவில் சிதிலமடைந்து வருகிறது. இதை கருத்தில் கொண்டு, மரபு வழியில், கட்டுமானத்தை புனரமைக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Scanned with OKEN Scanner



நாகை வேளாங்கண்ணி கடற்கரையில் பெங்களூர், நேஷா தொண்டு நிறுவனம் சார்பி
அமைக்கப்பட்டுள்ள சுனாமி பேரழிவு குறித்த ஓவிய கண்காட்சியை கலெக்டர் ஜவஹர் நேற்
பார்வையிட்டார்.

படம்: சுந்தர்

Scanned with OKEN Scanner

கு.கவிமணி





# மனிதனைப் பலியிடும் பாறை ஓவியம் கண்டுபிடிப்பு

திருச்சி மாவட்டம், பச்சைமலை அடிவாரத்தில் உள்ள தலுகை மங்கப்பட்டியில் பழமையான பெருமாள் கோயில் உள்ளது. முன்பு மரத்தடியில் அமைந்திருந்த இந்தக் கோயிலுக்குத் தற்போது சிறிய சுவரை வேய்ந்து நிழல் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோயிலின் மேற்சுவர மட்டுமே மாற்றப்பட்டுள்ளது; கல்தூண்களால் நிறுத்தப்பட்டுள்ள அடிப் பகுதியானது ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பழமையானது. இதை அந்தத் தூண்களில் உள்ள ஓவியக் குறியீடுகள் மூலம் அறிய முடிகிறது. இந்தப் பழமையான தூண்கள் நிறுத்தப்பட்டுப் பல ஆண்டுகள் ஆனாலும் ஒளி மங்காமல் பளபளப்பாகக் காட்சியளிக்கின்றன. ஜோதிடர் மயில் பொன்னுசாமியுடன் இணைந்து கள ஆய்வில் இறங்கினேன்.

## பலியிடல் ஓவியங்கள்

இந்தக் கோயிலில், பாறைகளில் செதுக்கப்பட்ட எட்டுத் தூண்கள் உள்ளன; வலப்புறம் நான்கு, இடப்புறம் நான்கு. இடப்புறம் உள்ள முதல் தூணில் மேலும், கீழுமாக இரண்டு பாறை வரைவுகள் காணப்படுகின்றன. மேலே உள்ள ஓவியத்தில் ஒரு மனிதனின் கை, கால்கள் கட்டப்பட்டு, அந்த மனிதனை ஊசி போன்ற கூர்மையான தூணில் செருகி (கழு மரத்தில் ஏற்றி) பலியிடுவது போன்று வரையப்பட்டுள்ளது. கீழே உள்ள ஓவியத்தில் ஆட்டின் தலையை ஒரு ஊசி போன்ற கூர்மையான தூணில் செருகி பலிகொடுப்பது போன்ற ஓவியம் காணப்படுகிறது. இரண்டு ஓவியங்களும் கல்லில் செதுக்கப்பட்டுள்ளதால் வெள்ளை நிறத்தில் காட்சியளிக்கின்றன.

## மெரியா பலித்தூண்

இந்த ஓவியங்களிலுள்ள மனிதன் மற்றும் ஆட்டைப் பலியிடும் முறைக்கு மெரியா பலியிடல் என்று பெயர். தற்போது தமிழகத்தில் இந்தப் பலியிடல் முறை வழக்கத்தில் இல்லை. ஒரிசாவில் உள்ள கோண்டு பழங்குடியினர் மெரியா தூணில் ஆட்களைப் பலியிடும் பழக்கம் 1852 வரை இருந்தது. மெரியா பலியிடலுக்குப் பயன்படுத்தப்பட்ட பலித்தூண் ஒன்று சென்னை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வூரில் வசிக்கும் பழங்குடியினர், ஒரிசாவில் உள்ள கோண்டு பழங்குடியினரைப் போன்று பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகத் தம் வயல்களில் பயிர்கள் வளமுடன் விளைவதற்குத் தம் குலப் பெண் தெய்வத்துக்கு நரபலி கொடுத்து வழிபடும் வழக்கம் இருந்துள்ளதையும் இந்தப் பாறை ஓவியங்கள் தெரிவிக்கின்றன.

- கு.கவிமணி, உதவிப் பேராசிரியர், வண்ணக்கலைத் துறை, சென்னை அரசு கவின்கலைக் கல்லூரி.
தொடர்புக்கு: kavimaniku@gmail.com

# கலை எழுச்சிக்கு சான்றாகும் வெங்கனூர் தான்தோன்றீஸ்வரர் கோவில்

## புனரமைத்து பாதுகாக்க முன்வருமா தமிழக அரசு?

**சென்னை, டிச. 7–**

நாயக்கர்களின் கலை எழுச்சிக்கு சான்றாக விளங்கும் வெங்கனூர் தான்தோன்றீஸ்வரர் சிவன் கோவிலில் உள்ள சிற்ப தூண்கள், சுவர் ஓவியங்கள் சிதிலமடைந்து, அழியக்கூடிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

அவற்றை மரபு வழியில் புனரமைத்து பாதுகாக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

தமிழர் கலை வரலாற்றின் தொன்மப் பகுதியாக, பெரம்பலூர் வட்டார கோவில்கள் திகழ்கின்றன. குறிப்பாக, வெங்கனூர் தான்தோன்றீஸ்வரர் சிவன் கோவில், சோழர்களின் கலை பரவலாக்கத்திற்கும், நாயக்கர்களின் கலை எழுச்சிக்கும் சான்றாக உள்ளது.

### பாதுகாக்க வேண்டும்

அந்த வகையில், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை தாலுகாவில், வெங்கனூர் என்ற ஊரில் தான்தோன்றீஸ்வரர் சிவன் கோவில் உள்ளது.

அங்கு மண்ணில் புதைந்து கிடைத்த தான்தோன்றி லிங்கம் வாயிலாக, அது நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட பழமை வாய்ந்த கோவில் என அறிய முடிந்தது.



'கஜபிருஷ்டம்' வடிவில் உள்ள வெங்கனூர் 'தான்தோன்றீஸ்வரர்' கோவில் கருவறை மற்றும் சுண்ணாம்பு அடித்து காணப்படும் சிற்பத்தூண்கள்.

அக்கோவில், தற்போது காலத்தால் அழிந்து வருகிறது. கோவிலில் கிடைத்த கல்வெட்டுகளின்படி, இத்தலம் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. விஜயநகர மன்னர் வெங்கடபதி தேவர் மகாராயர் காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

மிகுந்த கலை வேலைப்பாடு கொண்ட இக்கோவில், 'சுத்த வேசரம்' எனும் பாணியில் கட்டப்பட்டுள்ளது. இதுபோல், தமிழகத்தில் வெகுசில மட்டுமே உள்ளன. 'கஜபிருஷ்ட' அமைப்பில் கட்டப்பட்ட இக்கோவிலின் கருவறை மிகவும் அரிதானது.

கோவில் கருவறையைச் சுற்றிலும், புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கோவில் தூண்களில், நாயக்கர் கால கட்டடக் கலைக்கு பெயர்போன மகர யாழிகள், போர் குதிரை சிற்பங்கள், பறவைகள், இலை, செடி, பூக்களும் காணக் கிடைக்கின்றன.

இக்கோவில் சுற்றுப் பாதை, பெரியம்மை நாச்சியார் சன்னிதி மற்றும் வசந்த மண்டபத்தில் உள்ள சுவர் ஓவியங்கள், நாயக்கர் கால ஓவியங்கள், மராட்டியர் கால ஓவியங்கள் மற்றும் சமகால ஓவியங்கள் என, மூன்று காலகட்டங்களில் வரையப்பட்டுள்ளன.

கோவில் சிற்பத் தூண்களை தட்டினால், வெண்கல சத்தம் கேட்கும். அதனால் தான், இந்த ஊருக்கு வெங்கனூர் என பெயர் உருவாகியுள்ளது. தற்போது, இந்த தூண்களில் சுண்ணாம்பு பூசப்பட்டு, சிற்பங்கள் அனைத்தும் தெளிவின்றி காணப்படுகின்றன.

எனவே, சிற்பத் தூண்களை தூய்மை செய்ய வேண்டும். பல சிற்பங்கள் எண்ணெய் குளியல் செய்யப்பட்டு, தேய்மானம் அடைந்துள்ளன. அந்த வகை சிற்பங்களையும் தூய்மை செய்து பாதுகாக்க வேண்டும் என, கோரிக்கை எழுந்துள்ளது.

### நுண்ணிய வேலைப்பாடு

இதுகுறித்து, இக்கோவிலை ஆய்வு செய்த சென்னை அரசு கவின் கலை கல்லூரி பதிப்பு ஓவியத்துறை தலைவர் கு.கவிமணி கூறியதாவது:

தமிழகத்தில் கோவில் கலை என்றால், தஞ்சை என்ற பொது சிந்தனை உள்ளது. சோழர்களின் வரலாற்றில் மிகுதியாக பேசப்படுவது, தஞ்சை மண்டலம் மட்டுமே. எஞ்சிய பிற பகுதிகள் குறித்த ஆய்வுகள் முழுமையாக செய்யப்படாததன் வெறுமையை, வெங்கனூர் ஆய்வு புலப்படுத்துகிறது.

பெரம்பலூர், சேலம் மாவட்டங்களில் பல கோவில்கள் நுண்ணிய கலை வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளன. ஆனால், அவை தற்போது காலத்தால் அழிந்து, சிதிலமடைந்து காணப்படுகின்றன.

வரலாறு சிறப்பு பெற்ற வெங்கனூர் தான்தோன்றீஸ்வரர் சிவன் கோவிலை, மரபு வழியில் புனரமைத்து பாதுகாக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுப்பதோடு, இதுபோன்ற புராதன நினைவு சின்னங்களை பராமரிக்கும் வகையில், மாவட்டந்தோறும், பாரம்பரிய மேலாண்மை சிறப்பு குழு அமைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.


தினமலர்

வாரமலர்

**போட்டி முடிவுகள்!**

**தினமலர் – வாரமலர் நவ., 30, 2025 இதழில் வெளியான, 'குறுக்கெழுத்துப் போட்டி'யின் சரியான விடை:**

**இடமிருந்து வலம்:** 1.ஜயம். 5.சிகாகோ. 6.பாசாங்கு. 9.கடி. 11.ஆம்லெட். 12.முன்பு. 13.வேடிக்கை. 15.அம்மான்.

**வலமிருந்து இடம்:** 2.சின்னம். 4.உண்ட. 14.ஆருடம். 16.விமானி. 17.துட்டு.

**மேலிருந்து கீழ்:** 1.ஐரோப்பா. 3.குணம் நாடி. 8.கும்மிருட்டு. 9.கலக்கமா. 10.மீன். 12.முக்கனி. 15.அது.

**கீழிருந்து மேல்:** 4.உடம். 7.சங்கடம். 13.வேட்டைக்காரன். 16.விரும்பு. 18.தேன்.

**சரியான விடையெழுதி பரிசு பெறும் வாசகர்களின் விவரம்:**

**முதல் பரிசு ரூ.2,500:** எம்.கலியப்பெருமாள், சிதம்பரம்.


# தட்டச்சு பள்ளிகளுக்கு 'தமிழ் 99' கட்டாயம்


Scanned with OKEN Scanner

# பிரமிக்க வைக்கும் தத்ரூபமான கள்ளழகர் ஓவியம்
## அருங்காட்சியகத்தில் 11 நாள் கண்காட்சி துவக்கம்




கலை பண்பாட்டுத் துறையின் சார்பில், எழும்பூர் அருங்காட்சியகத்தில், மாநில அளவிலான ஓவிய சிற்பக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள ஓவியங்கள்.

**சென்னை, ஜூலை 11-**
கலை பண்பாட்டுத் துறை சார்பில், மாநில அளவிலான 11 நாள் ஓவிய சிற்பக் கண்காட்சி, எழும்பூர் அருங்காட்சியகத்தில் நேற்று துவங்கியது. கண்காட்சியில் விதவிதமான ஓவியங்கள் பிரமிக்க வைக்கின்றன.

கண்காட்சியை, தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் சாமிநாதன் துவக்கி வைத்தார். சிறந்த படைப்புகளை உருவாக்கிய கலைஞர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்.

நிகழ்வில், சென்னை மேயர் பிரியா, கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் கவிதா ராமு, இணை இயக்குநர் கோ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கண்காட்சியில், கள்ளழகர் பவனி செல்லும் ஓவியத்தை தத்ரூபமாக வரைந்திருந்த, கோவை பீளமேட்டைச் சேர்ந்த ஓவியர் ஜீவன் வெ.சக்திவேல், 40, கூறியதாவது: கள்ளழகர் படத்தை வரைய வேண்டும் என்பது நீண்ட கால கனவு.

இந்த படம் 7 அடி நீளம், 5 அடி அகலம் கொண்டது. சுற்றி உள்ள ப்ரேம் தேக்கு மரத்தில் செய்து, அதில் பெருமாளுடைய சின்னங்களை செதுக்கியுள்ளேன்.

எண்ணெய் வண்ண ஓவியமான இதை, கேன்வாசில் வரைந்துள்ளேன். இதை வரைந்து முடிக்க ஒரு ஆண்டு ஆனது. கள்ளழகர் சிலையில் உள்ள கோல்டு வண்ணத்தை பல அடுக்குகளாக கொடுக்க வேண்டும். அப்போது தான் ஓவியம் தத்ரூபமாக இருக்கும்.

அதேபோல், கள்ளழகர் உலா செல்லும்போது, மல்லிகை பூ கொண்டை, ஆஞ்சநேயர் கொடி, நாமம் இடப்பட்ட விசிறி ஆகியவையும் உடன் வரும். கள்ளழகரை சுமந்து செல்பவர்களுடைய முகபாவங்கள் என அனைத்தையும் தத்ரூபமாக வரைய வேண்டும் என பார்த்து பார்த்து வரைந்தேன். இதன் விலை, ஏழு லட்சம் ரூபாய்.

இவ்வாறு அவர் கூறினார்.

கண்காட்சி இம்மாதம், 20ம் தேதி வரை நடக்கிறது. [illegible]

> **அரசின் இந்த முயற்சியால், கலைக் கல்லூரி மாணவர்கள், தன்னார்வ ஓவியர்கள், மூத்த கலைஞர்களுக்கு அங்கீகாரம் கிடைக்கிறது. அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. என்னதான் செயற்கை நுண்ணறிவு வந்தாலும், அதன் மூலமாக ஓவியங்கள் வரையப்பட்டாலும், அதற்கான காப்புரிமை மனிதர்களிடமே உள்ளது. ஆகவே, அறிவுசார் சொத்துரிமை மனிதர்களுக்கு சொந்தமானது. அவற்றை வளப்படுத்த இது போன்ற நிகழ்ச்சிகள் உதவுகிறது.**
>
> — **கு.கவிமணி,**
> பதிப்போவியத்துறை தலைவர்,
> அரசு கவின் கலை கல்லூரி, சென்னை

### புது மணப்பெண் நான்தான்!



சென்னை கவின் கலை கல்லூரி மாணவி கா.லாவண்யா ஜெகப்ரியன் கூறியதாவது:

புதுமண பெண் புகுந்த வீட்டில் சமையல் செய்யும் படத்தை வரைந்துள்ளேன். திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின் என, பெண்ணின் வாழ்க்கையை இரண்டாக பார்க்கலாம். பிறந்த வீட்டில் சமையல் அறை பக்கம்கூட செல்லாத ஒரு பெண், திருமணத்திற்கு பின், தன் கணவனுக்காக சமையல் அறையில், சமைப்பதை காட்சிப்படுத்த விரும்பினேன்.

அதனால், நெற்றி நிறைய குங்குமம், சரமான தாலியுடன், பட்டுப்புடவை உடுத்தி சமைக்கிறாள். அடுப்பறை சூட்டை புதிதாக உணர்வதுபோல், ஆவியை கண்டு அஞ்சியவள் போல் வரைந்துள்ளேன். அந்த படத்தில் இருப்பது நான்தான். என் கணவர் புகைப்படம் எடுத்தார்.

இவ்வாறு அவர் கூறினார்.

Scanned with OKEN Scanner